**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 78/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | செம்மலை |
| Father's Name/Husband Name: | முருகேசன் |
| Village : | சு.ஆடுதுரை |
| Taluk : | குன்னம் |
| Age : | 29/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.05.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எலக்டீரிசனாக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய நண்பர். கடந்த 13.03.2023ம் தேதி காலை 10.30 மணியளவில் வேலைக்கு செல்வதற்காக ராஜா எனக்கு முன்னாள் சென்றுவிட்டார். நான் 5 நிமிடம் கழித்து அவருக்கு பின் வேலைக்கு சென்றேன். என்னுடன் கொளஞ்சி என்பவரும் என்னுடைய இரு சக்கர வாகனத்தில் வந்தார். நாங்கள் திருமாந்துறை மாரியம்மன் கோவில் அருகே வந்தபோது எங்களுக்கு எதிரே எதிரிகள் இருவரும் வந்தார்கள்.

எதிரிகள் இருவரும் அ.சா.1 யிடம் எனது மகளை ஏமாற்றி திருமணம் செய்து கொண்டாயா நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று சொல்லி எதிரி கௌரி அ.சா.1 ஐ கெட்ட வார்த்தையால் திட்டினார். எதிரி கௌரி அவர் அணிந்திருந்த செருப்பால்

அ.சா.1னின் நெஞ்சில் அடித்தார். எதிரி கிஷோர் அ.சா.1 ஐ பிடித்துக் கொண்டார். மீண்டும் கௌரி அ.சா.1 ஐ செருப்பால் அடித்தார். சண்டையை தடுக்க சென்ற எங்களை நீங்கள் வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் எங்கள் பிரச்சனைக்கு வர வேண்டும் என்று சொன்னார்கள். காயம் பட்ட ராஜாவை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றோம். அதன்பிறகு நாங்கள் கிளம்பிவிட்டோம். போலிசார் 17ம் தேதி என்னை வீட்டில் வைத்து விசாரித்தனர். எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். எதிரிகள் இன்று ஆஜர் இல்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் Diploma , Electrician படித்துள்ளேன். சம்பவத்திற்கு முன்ப நானும் அ.சா.1ம் எத்தனை ஆண்டுகள் நண்பர்களாக இருக்கிறோம் என்றால் 5 ஆண்டுகளாக இருக்கிறோம். அ.சா.1ன் திருமணத்தில் நான் கலந்து கொண்டேனா அல்லது சாட்சி கையொப்பம் போட்டேனா என்றால் நான் அங்கு இல்லை. நான் முதன்மை வாக்குமூலத்தில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் கூறினேனா என்றால் ஆமாம். எனது இரு சக்கர வாகனத்தில் தான் அ.சா.1ஐ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன் என்றால் சரிதான். மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இருந்து காவல் நிலையத்தில் சம்பவம் குறித்து புகார் ஏன் கொடுக்கவில்லை என்றால் அ.சா.1க்கு பதட்டமாகவும் , நெஞ்சு வலி என்றும் சொன்னதால் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று விட்டேன். மருத்துவமனையில் மருத்துவரிடம் நான் அ.சா.1 உடன் நடந்த சம்பவத்தை நான் சொன்னேன் என்றால் சரிதான். அ.சா.1 ன் பெற்றோர்கள் மருத்துவமனைக்கு வந்த பின்னர் நான் அங்கிருந்து கிளம்பிவிட்டேன். அதன்பிறகு அ.சா.1 யாருக்கு எதிராக என்ன குற்றம் செய்தார்கள் என்று புகார் கொடுத்த விவரம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான்.

கடந்த 13.03.2020ம் தேதி காலையில் மருத்துவமனைக்கு அ.சா.1 ஐ அழைத்துச் சென்றேன். எந்த நேரத்தில் அழைத்துச் சென்றேன் எனக்கு நேரம் ஞாபகமில்லை. சம்பவம் நடந்த 2 மணி நேரத்தில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். 2ம் எதிரி கொடுத்த புகாரில் என்னை எதிரியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். நான்

சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், எனது நண்பருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.